**செ. கு. எண்:130** **நாள்: 11.09.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை– 11.9.2017

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், உடையாம்புளி கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளத்துரை என்பவரின் மகன் சிறுவன் இளங்கோ என்பவர் 10.6.2017 அன்று சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம் கோவிலூர் கிராமம், ஒரத்தநாடு – வெட்டிக்காடு தேசிய நெடுஞ்சாலையில், சாலையோரத்தில் இருந்த மரம் முறிந்து விழுந்ததில், திரு. வேலு என்பவரின் மகன் திரு. பாண்டியன் என்பவர் 10.07.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காட்டுப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவராஜ் என்பவரின் மகன் செல்வன் சபரி, என்பவர் 12.07.2017 அன்று தனியார் பள்ளியில் விளையாடிக்கொண்டிருந்த போது, தேங்கியிருந்த மழை தண்ணீர் குழியில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அ. கலையம்புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு அழகு என்பவரின் மகள் செல்வி சரஸ்வதி என்பவர் 18.7.2017 அன்று எதிர்பாராதவிதமாக குவித்து வைக்கப்பட்டிருந்த மண் சரிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், ஏ மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியப்பன் என்பவரின் மகன் திரு மாரியப்பன் மற்றும் திரு முருகன் என்பவரின் மனைவி திருமதி முனியம்மாள் ஆகிய இருவரும் பட்டாசு வெடித்ததில், தூண் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கடியப்பட்டிணம் கிராமத்தைச் சேர்ந்த திரு மிக்கேல் என்பவரின் மகன் திரு மரிய எப்ரேன் என்பவர் 29.7.2017 அன்று பைபர் படகில் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த 7 நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

K. **பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**